செ.வெ.எண்: 15 நாள்: 7.1.2018

**புதுக்கோட்டை மாவட்டம்**

**3,294 குடும்ப அட்டைதாரர்களுக்கு பச்சரிசி, சர்க்கரை, கரும்பு, முந்திரி, திராட்சை, ஏலக்காய் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி, சேலை – மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பில் குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழ்நாடு அரசின் பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் இன்று (7.1.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு பச்சரிசி, சர்க்கரை, கரும்பு, முந்திரி, திராட்சை, ஏலக்காய் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்புகள் மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,

பொங்கல் திருநாளை தமிழ்நாடு முழுவதும் உள்ள பொதுமக்கள் சிறப்பாகவும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடும் வகையில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலைக்கடைகள் மூலம் பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்க உத்தரவிட்டு வழங்கினார்கள். இதனடிப்படையில் அரிசி குடும்பஅட்டை உடைய குடும்பங்கள், காவலர் குடும்பஅட்டை பெற்றுள்ள காவலர் குடும்பங்கள் மற்றும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை தமிழர் குடும்பங்கள் ஆகியோருக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, இரண்டு அடி நீள கரும்புத் துண்டு, 20 கிராம் முந்திரி, 20 கிராம் உலர்ந்த திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியவை அடங்கிய ரூ.112/ மதிப்பிலான சிறப்பு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்படுகின்றது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மகளிர் அங்காடிகள், மற்றும் இலங்கை வாழ் தமிழரின் அங்காடிகள் என மொத்தம் 1002 அங்காடிகள் இயங்கி வருகின்றன. இந்த அங்காடிகள் மூலம் 4,23,741 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட உள்ளது. இவர்களுக்கு ரூ.1,90,68,345 மதிப்பில் பொங்கல் பரிசுத்தொகுப்புகள் வழங்கப்பட உள்ளன. இந்த பொங்கல் பரிசுத்தொகுப்புகள் பொங்கல் திருநாளுக்கு

முன்னரே சம்மந்தப்பட்ட நியாய விலைக்கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும்.

இன்றைய தினம் கீரனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்குட்பட்ட 4 அங்காடிகள் மூலம் 3,294 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்புகள் இன்று வழங்கப்படுகிறது.

மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் பிறக்கும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தினார்கள். அதன் அடிப்படையில் பிறந்த குழந்தைகளுக்கு சிரிப்பை உண்டாக்க கிலுகிலுப்பை உள்பட பல்வேறு பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தைகள் நல பரிசு பெட்டகம் வழங்கப்படுகின்றது. பள்ளி மாணவர்களுக்கு வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் பென்சில், வரைபடம், காலணிகள், சீருடை, மிதிவண்டி, மடிக்கணினி உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது. கீரனூர் அரசு மருத்துவமனையில் அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு உள்ளன. கீரனூரில் இருந்து சென்னைக்கு நேரடி பேருந்து வசதியும் செய்யப்பட்டு உள்ளது. பொதுமக்கள் அனைவரும் பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாட எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், வருவாய் கோட்டாட்சியர்(பொ) திரு.எஸ்.செல்லப்பா, முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு.ஆர்.பால்ராஜ் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை மாவட்டம்.